1.2 **திட்டங்கள்**

## பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம்

நகர்ப்புரத்தில் உள்ள ஏழை மக்களின் வறுமையை ஒழிப்பதற்காக இத்திட்டம் நிறுவப்பட்டது. இத்திட்டத்தில் 6 உட்கூறுகள் உள்ளது.ம த்திய அரசு 75% வீதமும் மாநில அரசு 25%வீதமும் நிதி வழங்குகிறது. நகர்புறசுயவேலை வாய்ப்புத் திட்டம் () இலாபம்ஈட்டும் வகையில் சுயவேலைவாய்ப்பினை ஏற்படுத்த நகர்ப்புற தனிநபர் ஏழை பயனாளிகளுக்கு உதவி செய்தல் இத்திட்டத்தின் கீழ் 2009-10 ம் ஆண்டு 4 இலட்சம் கடன் தொகையும் 2012-13 ம் ஆண்டு ரூ22,21.452 லட்சம் கடன் தொகையும் 86 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

## நகர்புற சுயவேலைவாய்ப்புத் திட்டம்

இலாபம் ஈட்டும் வகையில் சுயவேலைவாய்ப்பினை ஏற்படுத்த நகர்புற தனிநபர் ஏழை பயனாளிகளுக்கு உதவி செய்தல்.

இத்திட்டத்தின் கீழ்70% கடன் தொகை 25% மான்யம்5% பயனாளிகள் பங்கு தொகையுடன் நகர்புற வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2009-10ம் ஆண்டு ரூ4 லட்சம் கடன் தொகையும் 2010-11 –ம் ஆண்டு ரூ6,82,740/ 2011-2012ம் ஆண்டு ரூ8,65,144/ லட்சம் கடன் தொகையும் 2012-13 ம் ஆண்டு ரூ22,21,452 கடன் தொகையும்86 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

## நகர்புற மகளிர் சுய உதவித்திட்டம்

நகர்புற ஏழை பெண்கள் பயன் பெற தக்க வகையில் சுய வேலைவாய்ப்பு முறையினை பற்றிய கடன் மற்றும் மான்யம் வழங்குவது குறைந்த பட்சம் 5உறுப்பினர்களை கொண்ட மகளிர் குழுக்கள் திட்டத்தில் பயன்பெறலாம். இத்திட்டத்தில் 60% கடன் தொகை 35%மான்யம் மற்றும் 5% பயனாளிகள் பங்கு தொகையுடன் உள்ள வறுமை கோட்டிற்குகீழ் உள்ள குழுக்களுக்கு வழங்கப்படுகிறது.2009-2010 முதல் 2012-13வரை 12 குழுக்களுக்கு ரூ19,59,000/ லட்சம் கடன் தொகையும் ரூ6,85,650/ லட்சம் மான்யமும் வழங்கப்பட்டுள்ளது.

## நகர் புற ஏழைகளின் மத்தியில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்த திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம்

இத்திட்டமானது நகர்புற ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு பயிற்சி அளிப்பதின் மூலம் நிறந்தர வருமானம் பெறுவோருக்கு ஈடாக தாங்களும் வருமானம் பெறமுடியும் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது. இத்திட்டத்தின் கீழ் 18 முதல் 35 வயதுக்கு உட்பட்ட ஆண்-பெண் இருபாலரும் திறன் மேம்பாட்டு பயிற்சி பெறலாம் 75% பயனாளிகளுக்கு தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் வழங்கப்படும்.

## சுழல்நிதி

நகர்புற ஏழை பெண்களால் ஏற்படுத்தப்பட்ட சுயஉதவி குழுக்களுக்கு சுழல்நிதி வழங்குதல்

வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள தனி நபருக்கு ரூ2000 வீதம் கிடைக்க வழி செய்கிறது.சுழல் நிதியினை தொழில் தொடங்க தேவையான உபகரணங்கள் வாங்குதல் மற்றும் சந்தைப்படுத்துதலுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம்2009-13 முதல் 20குழுக்களுக்கு ரூ2,73,835/லட்சம் சுழல் நிதி தொகை வழங்கப்பட்டுள்ளது.

## நகர்புற கூலி வேலைவாய்ப்புத் திட்டம்

நகர்புற ஏழைகளை கண்டறிந்து அவர்களுக்கு தினசரி வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருகிறது. குறிப்பாக அரசால் ஏற்படுத்தப்படும் கூட்டமைப்பு பணிகளில் ஈடுபடுத்தி அவர்களுக்கு வருமானம் ஏற்படுத்தி தருகிறது.2009-12 வரை 5 வேலைகள் மணப்பாறை நகராட்சிப்பகுதியில் எடுக்கப்பட்டு வேலை முடிவடைந்துள்ளது.

## நகர்புற சமுதாய மேம்பாட்டு அமைப்பு

நகர்புற சமுதாய மேம்பாட்டு அமைப்பு இத்திட்டத்தில் முக்கிய பங்கு வகுக்கிறது. இத்திட்டமானது சமுதாயம் சார்ந்த நகர்புற அமைப்புகளை வழிநடத்தி நிறந்தர வறுமை ஒழிப்பிற்கு உதவுகிறது.கல்வி மற்றும் சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை மழை நீர்சேகரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சமுதாய முன்னேற்ற செயல்பாடுகள் மற்றும் பயிற்சிகள் பிறதுறை நலத்திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

**ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டமானது ஏற்கனவே செயல்பாட்டில் இருந்து வந்த வாம்பே மற்றும் தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைத்து புதிய திட்டமாக செயல்பட உள்ளது. வீட்டு வசதி மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாத குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் மேம்பாட்டிற்கான திட்டம் ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டமாகும்.

2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் ஜவகர்லால் நேரு தேசிய நகர்புற சீரமைப்பு திட்டத்திற்கு உட்பட்ட மாநகரம் மற்றும் நகரப்பகுதிகளை தவிர மற்ற பகுதிகளில் இத்திட்டமானது செயல்படுத்தப்படும்.

இத்திட்டமானது பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் நகர்புறங்களில் உள்ள அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு உதவுகின்றது.

**நோக்கம்**

இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமானது அடிப்படை வசதிகள் இல்லாத குடிசைப்பகுதிகளில் போதுமான சுகாதார சுற்றுப்புற சூழலை மேம்படுத்துவதுடன் நகர்புறங்களில் உள்ள தேர்வு செய்யப்பட்ட குடிசைப்பகுதிகளில் குடியிருப்போருக்கு தேவையான போதுமான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் செய்து குடிசைப்பகுதிகளை முழு வடிவில் மேம்படுத்துவதாகும்.

**உட்கூறுகள்**

இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதி உதவியானது குடிசைப் பகுதி அபிவிருத்தி மேம்படுத்துதல் இடம் மாற்றி அமைத்தல் போன்ற பணிகளுக்காகவும் குடியிருப்பை

மேம்படுத்தவும் புதிய குடியிருப்பு கட்டுமானத்திற்காகவும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளான குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு வசதிகள் போன்ற பணிகளும் மேற்கொள்ள வழி வகை செய்கிறது.

**நிலப்பத்திரத்தன்மை**

பயனாளியின் நிலப்பத்திரம் மனைவி-மனைவி அல்லது கணவர் பெயரில் இருந்தால் முன்னுரிமை வழங்கப்படும். ஒரு சில நேர்வுகளில் ஆண் பயனாளி பெயரில் பத்திரம் இருந்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**நிதி விபரம்**

ஒரு அலகிற்கு அதிகபட்சத் தொகை உச்சவரம்பு ரூ 80000. ஏற்கனவே .ஜவர்ஹலால் நேரு தேசிய நகர சீரமைப்பு திட்டம் செயல்படுத்தப்படும் நகரங்கள் பெருநகரங்களில் மட்டும் தொகை உச்சவரம்பு ஆண்டு தோறும் மாற்றி அமைக்கப்படும்.

சில சிறப்பினங்கள் மலைப்பிரதேசங்கள் ஆகிய பகுதிகளில் வரையறுக்ககப்பட்ட தொகை உச்ச வரப்புடன் 12.5 சதவிகிதம் கூடுதலாக சேர்த்துக் கொள்ளப்படும்.

**ஒரு அலகிற்கு தேவையான நில ஒதுக்கீடு**

இத்திட்டத்தின் கீழ் கட்டுமானம் செய்யப்படும் கட்டிதிற்கு குறைந்தபட்சம் 25 சதுர மீட்டர் தேவைப்படுகிறது. இதில் சமையலறையுடன் கூடிய இரண்டு அறைகள் மற்றும் கழிவறை கட்டுமானம் செய்யப்படும்.

உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் குடிசைப்பகுதியில் பராமரிப்பு

இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பொது சொத்துக்களை பராமரிப்பதற்கு தனியாக நிதி ஒதுக்கீடு செய்ய மாநில அரசு உறுதியளிக்க வேண்டும்.

**பயனாளியின் பங்குத்தொகை**

மாநில அரசு பயனாளிகளுக்கு இனாமாக வீடு கட்டித் தரக்கூடாது. குறைந்தபட்ச பயனாளியின் பங்குத்தொகை 12 சதவீதம் ஆக நிர்ணயம் செய்யப்பபட்டுள்ளது. ஆதிதிராவிடர்-மலைவாழ் பிரிவினர்-மிகவும் பிற்படுத்தப்பட்டோர்-உடல் ஊனமுற்றோர் ஆகியோர் மற்றும் நலிவடைந்த பிரிவினருக்கு 10 சதவிகிதம் ஆக பங்கு தொகை நிர்ணயம் செய்யப்பபட்டுள்ளது.

**அனுமதிக்க்ப்படும் உட்கூறுகள்**

1. புதிய குடியிருப்பு கட்டுமானங்கள் மற்றும் குடியிருப்புகள் மேம்படுத்தி இருப்பிட வசதி அமைத்து தருதல்.

2. சமுதாய கழிவறைகள் அமைத்துத் தருதல்.

3. குடிநீர் வழங்கல். மழைநீர் வடிகால் கட்டுதல். சமுதாய குளியலறைகள் அமைத்தல். சந்துக்களை அகலப்படுத்துதல். நடைபாதைகள் அமைத்தல். கழிவுநீர் வடிகால் கட்டுதல். கமுதாய கழிவறைகள் கட்டுதல். தெருவிளக்குகள் அமைத்தல். போன்ற அடிப்படை வசதிகள் செய்து தருதல்.

4. சமுதாய கூடங்களை முன் பருவகல்வி. பள்ளிச்சாரா கல்வி. முதியோர்கல்வி. மனமகிழ் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்கு பயன்படுத்துதல் போன்ற சமுதாய வசதிகளை செய்து தருதல்.

5. சமுதாய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான கட்டிடங்கள் அமைத்தல்.

6. பள்ளி முன் பருவ கல்வி, பள்ளி சாரா கல்வி, முதியோர் கல்வி, தாய் சேய் நலம் மற்றும் தடுப்புசி முதலான சமூக வசதிகள் செய்து தருதல்.

7. மாதிரி திட்ட விளக்க மையங்கள் அமைத்தல்.

8. பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் குறைவான வருமான உடையோர்களுக்கும் இடங்கள் மற்றும் வீடுகளை அம்மக்களால் ஏற்கக்க கூடிய மலிவு விலையில் உதவுதல்.

9. குடிசைப்பகுதி மேம்பாடு மற்றும் மறுவாழ்வு தொடர்பான திட்டங்கள்.

10. நில ஆர்ஜிதத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. வடகிழக்கு மாநிலங்கள். மலைபிரதேச மாநிலங்களான இமாச்சல பிரதேசம். உத்திரபிரதேசம் மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநிலங்களுக்கு மட்டும் தனியார் நில கையகப்படுத்துவதற்கு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் நிதி உதவி பெற சுகாதாரம் கல்வி. சமூக பாதுகாப்பு இவைகளை உட்கொண்டு விரிவான திட்ட அறிக்கை செயல்படுத்தும் நிறுவனம் மூலம் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

சமுதாய அமைப்புகளின் குறிக்கோளை அடையக்கூடிய திட்டங்களை மற்ற மாநில துறை சார்ந்த திட்டங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட வேண்டும்.

ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ். மணப்பாறை நகராட்சிப் பகுதியில் 120 வீடுகள் கட்டப்பட்டு முடிவடைந்துள்ளது. மேலும். ஒருங்கிணைந்த குடியிருப்புப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளது.

## திறந்தவெளி கழிப்பறைகள் ஒழிப்பு

### குடிசை பகுதிகளில் போதுமான கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துதல்:

மொத்த குடிசை பகுதிகள் : 12

தற்போதைய குடிசை பகுதி மக்கள் தொகை : 15872

வீட்டு குடியிருப்புக்கள் : 10273

கழிப்பறைகளின் எண்ணிக்கை : 5

டபுல்யுசி வகை இருக்கைகளின் (வாட்டர் கிளோசட்) எண்ணிக்கை : 30

அளிக்கப்பட்ட புதிய இருக்கைகள் : 0

மேம்படுத்தப்பட்ட இருக்கைகள் : 15

நிறைவேற்றப்பட்ட விதிமுறைகள் : 100%

## பொது கழிப்பறைகள் மற்றும் திறந்தவெளி கழிப்பிடத்தை தடுத்தல் நடவடிக்கைகள் விபரம்

இந்நகராட்சியில் மொத்தம் 14 பொதுக் கழிப்பிடங்கள் உள்ளது. இதில் 12 எண்ணிக்கை சுய உதவிக் குழுக்களில் பராமரிக்கப்பட்டு வருகிறது. 2 கட்டண கழிப்பிடங்களாக செயல்பட்டு வருகிறது.

மேற்கண்ட கழிப்பிடங்கள் அவ்வப்பொழுது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. சுகாதாரமாக நல்ல முறையில் பராமரிக்க சுய உதவிக் குழுக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது.

திறந்த வெளி கழிப்பிடங்களால் ஏற்படும் நோய்கள் குறித்து பொதுமக்களுக்கு நோடீஸ் வழங்கியும். விழிப்புணர்வு பேரணி நடத்தியும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்பு திட்டமாகும்.

திறந்த வெளியில் மலம் கழிப்பதை தடை செய்யும் திட்டத்தின் மூலம் நகரில் பொது சுகாதாரம் பேணப்படுவதுடன் பல்வேறு தொற்று நோய்களில் இருந்து பொது மக்கள் பாதுகாக்கப்படுகின்றனர்.

இந்நகராட்சியில் மேற்படி திட்டத்தின் மூலம் கீழ்கண்டவாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்படுகிறது.

## சமுதாய கழிப்பிடம் கட்டும் பணியின் விபரம்

| வ. எண் | வருடம் | பணிகளின் எண்ணிக்கை | செல வினம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1 | 2011-2012 | 3 | 13.47 | பணிகள் முடிவடைந்து நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. |
| 2 | 2012-2013 | 3 | 5.80 | |
| 3 | 2012-2013 | 1 | 3 | பணிகள் முடிவடைந்து நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. |
| 4 | 2013-2014 | 2 | 4.50 | பணிகள் முடிவடைந்து நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. |



**MANAPPARAI MUNICIPALITY**

**ERADICATION OF OPEN DEFECATION 2011-12**




After Completion

ESTIMATE AMOUNT : Rs.10.00 LAKHS

NAME OF WORK : CONSTRUCTION OF COMMUNITY TOILET AT WARD No.20 FATHIMAMALAI